பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1. | பொள்ளாச்சி. 7-6-51. விலை அரையணா. | வெற்றி 17

சர்க்கார் சிப்பந்திகளே சிந்தியுங்கள்.

சுமார் 160-ஆண்டுகளாக அந்நிய ஏகாதிபத்தியம் நம்மை ஆண்டு வந்தது. அந்நியர் இங்கு அரசு செய்த காலத்தில், சர்க்கார் அதிகாரிகள் தங்கள் சொந்த சர்க்கார்போல பாவித்து மிகவும் விஸ்வாசமாகவும் பயபக்தியுடனும் நடந்து வந்தனர். சர்க்காருக்கு எதிராக பேசுபவர்களையும், நடப்பவர்களையும் ஜெயிலுக்கு அனுப்பினர். மேலதிகாரிகட்கும் மந்திரிக்கும் பயந்து நடந்தனர். அவ்வப்போது சர்க்காரின் கட்டளைகளை சிரமேற் தாங்கி நிறைவேற்றி வந்தனர். கட்டுப்பாடு, ஒழுங்கு, நியதி, நேர்மை இருந்தது. யாரேனும சர்க்காருக்கு விரோதமாக இருந்தால் கடுமையான நடவடிக்கை எடுத்தது, அன்றைய சர்க்கார்.

இன்று சுதந்திர சர்க்கார் நடக்கிறது. நம்முடைய சர்க்கார் மக்களின் சர்க்கார் ஆனல், அதிகாரிகள் சர்க்காரிடம் விஸ்வாசமாக இல்லை. சர்க்கார் இடும் உத்திரவுகள் ஆமை வேகத்தில் கூட நிறைவேற்றப்படுவதில்லை. என்னென்ன முட்டுக்கட்டைகள் போடமுடியுமோ அதை எல்லாம் செய்கின்றனர்.

பெரிய அதிகாரிகள் முதல் சாதாரண சிறிய சிப்பந்தி வரை, பலர் சர்க்காரைக் குறை கூறியும், மந்திரிகளைக் கேலி செய்தும் மக்களுக்கு சர்க்கார் மீது அதிருப்தி ஏற்படும்படியான நிலையை உண்டாக்கி வருகின்றனர்.

எதை எடுத்தாலும். இது உங்கள் மந்திரிகள் செய்தவேலை, உங்கள் சர்க்கார் உத்திரவு, நாங்கள் என்ன செய்வது என்று சொல்கின்றனர். கட்டுப்பாடு, ஒழுங்கு இல்லை.

வேலையில் சுறுசுறுப்பு இல்லை. திறமைக்குறைவு காண்கிறது. பயம் என்பதே போச்சு. விஸ்வாசம் என்பதே கிடையாது ஒரு சர்க்கார் திறமையாக நடைபெறவேண்டுமேயானல் அதிகாரிகளினல் தான் அது சாத்தியமாகும். இன்று அந்த நம்பிக்கைபோய்விட்டது காங்கிரஸ் சர்க்கார் தொலையவேண்டுமென்று கருதுகின்றனர். அதிகாரிகள் காங்கிரஸ் சர்க்கார் போய் வேறு கம்யூனிஸ்ட் சர்க்காரோ, சோஷியலிஸ்ட் சர்க்காரோ வந்தால் தங்களின் நிலைமை என்ன என்பதை சிறிது யோசித்துப்பார்க்கட்டும் அதிகாரிகள்.

அ..ப ஏகாதிபத்திய அடிமைப் புத்தியில் ஊறிப்போன அதிகாரிகளை அடியோடு வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். சர்க்காருக்கு விரோதமாக, அதிகாரிகள் மனதில் நினைத்தால் கூட, சவுக்கடி தண்டனைகொடுப்பார்கள். ஒரு வாத்தியார் இன்னின்ன ஊர்களை ஹிட்லர் பிடித்து விட்டான் என்றுசொன்னதற்காக 1940-ல் ஆறு வருஷ தண்டனை கொடுக்கப்பட்டது. இன்று உபாத்தியாயர்கள் சர்க்காரை என்னவேண்டுமாயினும் பேசலாம் என்ற நிலைக்கு வ.. துவிட்டனர். காங்கிரஸ்காரர்கள் அதிகா..த்தில் இருக்கக்கூடாது, என்று நினைக்கி..றனர்.

காங்கிரஸ்தான் ஆட்சி நடத்த வேண்டும், என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்..வில்லை. ஆனல் காங்கிரஸைத் தவிர வே.. கட்சிகள் அதிகாரத்திற்கு வந்தால் அ..னல் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்கள் அல்ல. உண்மையில் அதிகாரிகளுக்கும் பணக்காரர்களுக்கும் தான் பாதகம் ஏற்..டும் என்கிற உண்மையை இனியாவது உணர்ந்து சர்க்காருக்கு நாம் கட்டுப்பட்..வர்கள் என்பதை உணர்ந்து சர்க்காருக்.. எதிரான பிரச்சாரத்தை உடனே நிறு..துங்கள், அல்லது வேலையை ராஜீநாமா.. செய்துவிட்டு, எதிரிகளுடன்சேர்ந்து சர்..காருக்கு எதிராக வேலைசெய்யுங்கள், உ..ளிருந்துகொண்டே கோட்டையைத் த..க்கும் வேலை வேண்டாம், அது இடிந்தா.. உங்கள் தலையில்தான் விழும்

நன்றி அறிவிப்பு.

எனது குமாரன் சிரஞ்சீவி வெங்கட்ராமனுக்கு 25-5-51 ல் நடத்திய உபநயனத்திற்கு நேரில் வந்திருந்தவர்கட்கும், வர இயலாமல் ஆசி அனுப்பி இருந்த நண்பர்கட்கும், பந்துக்களுக்கும் தனித்தனியே நன்றி கூற இயலாததால் இதன் மூலம் எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

எஸ். விஜயராகவன்,

ஏஜண்ட்:— பர்மாஷெல், பொள்ளாச்சி.

செல்வாக [illegible] குந்த தமிழ்
வாரப்பத்[illegible]ரிகை.

பொள்ளாச்சி முரசு

பொள்ளாச்சி 7—6—51. வியாழன்.

கள்ளமார்க்கட் கொள்ளைக்காரர்களை ஒழித்துக்கட்ட முன் வாருங்கள்.

நம் நகரில், பாம்பே மில்துணியும் பக்கிங்காம் கர்னடிக் துணியும், மொத்த வியாபாரிகள் சில்லரை வியாபாரிகள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. இதில் ஏராளமான ஊழல்கள் இருப்பதாக நமக்குப் புகார்கள் வந்துள்ளன.

கள்ளமார்க்கட்டில் வேஷ்டி 30-ரூ விலைக்கும் மல் கெஜம் 2-ரூபாய்க்கும் விற்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. நேரிடையாய்ப்போய்க் கேட்டால் துணி கிடைப்பதில்லை என்றும் கள்ளமார்க்கட்டில் தாராளமாய்க்கிடைப்பதாகவும் சொல்லப்படுகிறது.

கள்ளமார்க்கட்டுக்கு எப்படி துணிபோகிறது. யார் விற்கிறார்கள் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பன போன்றவைகளை எந்த அதிகாரியாவது கவனித்ததாகத் தெரியவில்லை.

இனி பொதுமக்கள்தான் கவனித்துக் கொள்ளவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. நகர காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடந்தபோது இது விஷயம் விவாதத்திற்கு வந்ததாகவும் நாம் அறிகிறோம்.

ஒரு சில அயோக்கிய சிகாமணிகள் கள்ளமார்க்கட்டில் கொள்ளை அடிப்பதால் வியாபாரிகள் மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்படுகிறது. இந்த கள்ளமார்க்கட்கொள்ளைக்காரர்களுக்கு நல்லபாடம் கற்பிக்க வேண்டும். இவர்களைக் கையும் களவுமாய்ப் பிடித்து அதிகாரிகளிடம் சேர்க்க, நகரிலுள்ள, கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், திராவிடக்கழகம், காங்கிரஸ் முதலிய கட்சிகளிலுள்ள வாலிபர்கள் முனையவேண்டும்.

மக்களுக்கு சரியான முறையில் பகிர்ந்து, விநியோகம் செய்யவேண்டிய துணியை, இந்தக் கொள்ளைக்காரர்கள் இப்படி கொல்லைப்புறத்தில் கொண்டு போகிறார்களே, இதற்குக் கேள்வி முறையில்லையா?

உடனே காங்கிரஸ் கமிட்டித்தலைவரும் காரியதரிசியும் கவனம் செலுத்தி துணியை, சரியானபடி விநியோகிக்க ஏற்பாடு செய்வார்களா? வருகிற துணி பூராவும், ஸ்டாக் இவ்வளவு என்று போர்டு போட்டு யாராவது அதிகாரி, அல்லது பொருப்பு வாய்ந்த பொதுநல ஊழியர்களை, முன் வைத்துக்கொண்டு பூராத் துணியையும் சரியானமுறையில் விநியோகிக்கவேண்டும் இதை வியாபாரிகள் செய்வார்களா? அல்லது கொள்ளை லாபத்திலேயே கவனம் செலுத்துவார்களா என்[illegible]தைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

சுடச்சுட!?

(அ. பாசித்)

○ கிழவி குமரியாகத் தோன்ற முடியும்! வயது 76 ஆனால் இன்னும் அழகியதோற்றம். (ஒரு செய்தி.)

இதென்ன ஆச்சரியம், நான் கூட இப்போது குமரியை (மணியம்மை)மணந்துக் கொண்டபின் குமரனாகி விட்டேன்என்று கூறிக்கொள்கிறார் ஈ. வெ. ரா. என்று ஒரு குருவி கூறுகிறது.

○ காங்கிரஸிற்கு இன்னும் சரியான எதிர் கட்சிகள் தோன்றவில்லை. (பி. எஸ். ரங்கசாமி)

இல்லை என்று யார் சொன்னார்கள்! நாங்கள் இருக்கிறோம் என்று மார் தட்டிக் கூறுகிறார்கள் அந்தர் பல்டி, பிரகாசம், ரங்கா கோஷ்டிகள்.

○ காயகல்ப முறையை கண்டுபிடித்தவர் மர்மமாகவே இருக்கிறார். (பத்திரிகை செய்தி.)

அந்த விஞ்ஞானி தம் அருகில் இருக்கக் கூடாதா என்று ஈ வெ. ரா. ஏக்கம் கொள்வார் எனத் தெரிகிறது.

○ சவுக்கடி ஆசிரியருக்கு ஒருமாத தண்டனை ரூ. 200 அபராதமும் விதிக்கப்பட்டது. (தினசரியில் செய்தி.)

சதிகாரக் கும்பலுக்கு சரியான சவுக்கடி போதும்.

○ அறிஞர் அண்ணா பேசுகிறார், கழகத் தோழர்களுக்குப்பாராட்டு! ஆள வந்தார்களுக்கு அறிவுரை. (முன்னேற்ற முரசு.)

எலிகளுக்குப் பாராட்டி புலிகளுக்குப் புத்தி கூறுகிறார் சக்தியில்லாத தளபதி.

செய்திகள்.

நகர காங்கிரஸ் கமிட்டி.

ஜூன் 3-ம் தேதி மாலையில் ஹரிஜன ஹாஸ்டலில் நகர காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் தலைவர் ஸ்ரீ எம், ராமசாமிக்கவுடர் தலையில் நடைபெற்றது.

நம் நகரில் 6-வது அரசியல் மாநாடு இம் மாத கடைசி வாரத்தில் நடத்துவதெனமுடிவுசெய்யப்பட்டது. காங்கிரஸ் கமிட்டியேஅதற்கு வரவேற்புக் கமிட்டியாக இருக்கும் மை மகாநாடு சம்மந்தமாக ஆக்கவேலைகளை கவனித்துவர தலைவருக்கும், காரியதரிசிக்கும்அதிகாரம் அளிக்கப்பட்டது:

தலைவர் ஸ்ரீ ராமசாமிக்கவுடர் நம் நகரில் மில் துணி மக்களுக்கு சரிவர கிடைக்க வேண்டிய நடவடிக்கையைத் தான் எற்றுக்கொள்வது எனறு கூறி மற்ற அங்கத்தினர்களையும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

கடின உழைப்பாளிகளுக்கு அதிக அலவன்ஸ் ரேஷன் வாங்கிக் கொடுக்கும் பணியை அந்தந்த வார்டுகளிலுள்ள காங்கிரஸ் ஊழியர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது: பின்னர் வரவு சிலவு கணக்கு [illegible]புக்கொள்ளப்பட்டது. தேநீர் விருந்துக்குப் பின் காரியதரிசி எஸ். காதர்மைதீன் நன்றி கூற கூட்டம் முடிந்தது.

ஹரிஜன சேவா சங்கம்.

ஞாயிறு பிற்பகலில் மை சங்க நிர்வாகிகள் கூட்டம் ஹரிஜன ஹாஸ்டலில் தலைவர் வே. ந. ஆறுமுகம் பி. ஏ. [ஆனர்ஸ்] தலைமையில் நடைபெற்றது. அதுசமயம், வீரல்பட்டி, சிங்காநெல்லூர் ஹரிஜன சேரிகள் தீப்பிடித்த விஷயமாக மை யூர்களின் சேவா சங்கத்தலைவர்கள் உடனடியாக வரவு சிலவு கணக்[illegible]களை வவுச்சர்களுடன் அனுப்பும்படி கேட்டுக் கொண்டு, சப்கமிட்டி ஒருமாதத்தில் பிர்க்கா கமிட்டிகளை அமைக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
கடை வீதி

மாடர்ன். கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

தரத்தில் உயர்ந்தவை
வெண்புரு பீடிகள்.

முத்துகுமார் ஸ்டோர்ஸ்,
மின்சார விளக்கு ஒலிபெருக்கி
அமைக்கவும் பிரசித்தி பெற்றஇடம்.

S. P. M கொடிமஜீத் பீடி.
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: ஏ. ஓ. ஏ. செட்டியார்.

P பட்டாபி செட்டியார்,
ஜெனரல் மர்ச்சண்ட்,
கடை வீதி.

வில்மார்க் பீடிகள்,
குணத்தில் உயர்ந்தது.

R. M. D. C. & சோலார் வாய்ஸ்
கலெக்ஷன் டிப்போ,
P. K. தங்கவேல் (டெய்லர்)
12, குமரன் வீதி.

S. R. V. லாட்ஜிங்கில்
சுகாதார முறைப்படி நல்லகாற்றோட்ட
முள்ள ரூம்கள் வாடகைக்கு விடப்படும்.

தினமணி & கதிர்
கிடைக்குமிடம் :
ஜகதீஸ் கோ., & கடை வீதி.

கண்டியம்மன் கம்பெனி,
கோயமுத்தூர் ரோடு,
மோட்டார் ஆயில் எஞ்ஜின், பம்பு
செட்டுகள் எலக்ட்ரிக் சாமான்கள்,
மற்றும் மெஷினரி சாமான்களும்
குறைந்த விலையில் எங்கள்
கம்பெனியில் கிடைக்கும்.
உரிமையாளர்:—
C. ரங்கசாமி கவுண்டர்.

(சிறுகதை)

கல்யாணப் பரிசு!

(அ. பாசித்)

டாண்... டாண்... டாண்.

கடியாரத்தைப் பார்த்தேன். மாலை மணி 5 அடித்தது. உடனே சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியில் புறப்பட்டேன். ஆனால் எங்கு செல்வது என்று தெரியாமல் என் கால்கள் சைக்கிளை அழுத்திக்கொண்டிருந்தன! நான் செல்லும் வழியில் டாக்டர் ராதா... என்ற சப்தம் கேட்டுத்திரும்பினேன். என் நண்பன் மது. அவனைக் கண்டதும் நான் கீழே இறங்கும் போது அவன் ... ஏய் ... என்ன உன் சைக்கிள் பஞ்சர் ஆகிவிட்டதுஎன்றான். நானு மேதோ தமாஷாகச் சொல்லுகிறான் என்று எண்ணினேன், ஆனால் உண்மையில் என் சைக்கிள் பஞ்சர்தான். என்ன செய்வது! சரி என்று சைக்கிளைத் தள்ளிக்கொண்டே இருவரும் பார்க் நோக்கி நடந்தோம்.

பார்க்கில் புல் தரையில் அமர்ந்து வேடிக்கையாக, பல விஷயங்களைப்பேசிக்கொண்டிருந்தோம். மது பேசிக்கொண்டேஇருந்தவன் திடீரென்று தன்னிடமிருந்தகைக்கேமிராவைக்கொண்டு அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு இளம்பெண்ணை போட்டோ பிடித்து விட்டான். அதோ அதோ அவள் இருக்கக்கூடாது. மறுபடியும் அவளுக்கு நேர் கேமிராவை நீட்டினான்: இதை எப்படியோ அவள் பார்த்து விடவே அவன் என்னசெய்வதென்று தெரியாமல திணறினான். நண்பனுக்கு ஆபத்தில் உதவிசெய்ய எண்ணி நானே கேமிராவுக்கு நேர் நின்று விட்டேன். அவன் உடனே என்னையே போட்டோபிடித்து விட்டான்.

ராதா இனி அங்கிருந்தால் தப்பு: உடனே கிளம்பு ... உன் சைக்கிளுக்கு பஞ்பர் ஒட்டிக்கொண்டு வீடு சேரலாம் என்னைப்பார்த்து மழுப்பினான்.

எனக்கு சிறிப்பதா அவன் நிலைக்கு பரிதாபப்படுவதா என்ற சந்தேகம் வந்துவிட்டது. சரி ... மது உன் இஷ்டப்படி வீடு போகலாம் என்று புறப்பட்டோம்.

என் வீடு வந்ததும் மதுவுக்கு அந்தபயத்தைப்போக்க சூடானகாபி ஒரு கப்கொடுத்து அதோடு அவனுக்கு பிடித்தமான புத்தகம் ஒன்று கொடுத்து பயமில்லாமல் நிம்மதியா வீடு செல் என்று சொல்லி வழியனுப் னேன்.

மது அன்று போனவன் இந்த 3-மாதகா மாகியும் என்னை சந்திக்கவேயில்லை. இது எ க்கு ஆச்சரியத்தை அளித்தது. அவன் வீ சென்று விசாரித்தேன். அவனைப்பற்றி ஒ றுமே தெரியாது என்று சொல்லிவிட்டார்

காலச்சக்கரம் சுழன்றது, அதை நிறுத் யாரால் முடியும், மெல்ல என் கலியாண பேச்சுகள் தொடங்கின; எனக்கோ ... மண செய்துகொள்ள என்மனம் இடம் தரவில்லை என்னசெய்வது விதவைத் தாயின் சொல்த டக்கூடாது. தாயின் பேச்சுக்குமறுத்துக்கூ என்வாய் அடங்கி விட்டது. மணம்செய் கொள்ள ஒப்புக்கொணடேன்.

அன்றிரவு தூக்கமேவரவில்லை. நாளை எ க்கு மனைவியாகப் போகிறவளைப்பற்றியு மறைந்த என் நண்பன் மதுவைப்பற்றியும் மாறிமாறி என்மனம் சிந்தனையில் இருந்தது அன்று பார்க்கில் நிகழ்ந்த காட்சி என் கண் முன் நின்றது. அந்த அழகிய பெண்ணின் டம்பிடித்தது தப்பா? மறுபடியும் நான் என் கேமிராவின் எதிரில் நிற்கவேண்டும்.

எனக்கு அப்பெண்ணின் நினைவு வந்தது ஆம் அவள்தான் எனக்கு மனைவி ஆகப்போ றவள். என்னுடன் வாழ்வை சுவைக்கப்போ கிறவள் ... லக்ஷ்மி ... ஆம் லக்ஷ்மியேதான் அவள் பெயர்!

பெரிய குடித்தனக்காரர்கள்இருக்கும்தெரு வில்தான் அவள் வீடு, மில் முதலாளியின் செல்வக்குமாரி. பி. ஏ: படித்திருக்கிறாள் நானும் ஒருடாக்டர் எனக்குத் தகுதியான பெண்தான் லக்ஷ்மி ஆனல் — நாளை அவளை மணந்தால் என் நண்பன் மது — ஆம் — அ வன் எங்கு சென்றிருப்பானோ என் திருமண தைப்பற்றி பத்திரிகைளில் விளம்பரம் செ தது ஒருவகையில் நல்லதென்று எனக்குப் லப்பட்டது. நல்ல நாளில்எனக்கும் லக்ஷ்மி கும் திருமணம் நடந்தேறியது. தம்பதிகளுக்கு பலவிதமான பரிசுகள்வழங்கினார்கள். அவை களில் ஒரு போட்டோ என் மனதைக்கவர் தது! அதை எடுத்துப்பார்த்தேன். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக என்கண்முன காட்சி யளித்தன! என்னையறியாமல் — சப்தமா மது — என்று கூவிவிட்டேன்.

[தொடரும்.]

உயர்ந்த மருந்துகள்! நாணயமான விலை!!
உங்களுக்கு சேவை செய்வதே எங்களின் கருத்து!!!
சகல விதமான இங்கிலீஷ் மருந்துகளும், ஆயுர்வேத மருந்துகளும் மிகவும் சரசமான விலையில் நம்பிக்கையோடு கிடைக்குமிடம்.

எல். எஸ். மணி & கோ.,

இங்கிலீஷ் மருந்து ஷாப், கெமிஸ்ட்ஸ் & டிரக்ஸ்ட்ஸ்,
தேர்முட்டி வீதி, பொள்ளாச்சி.

குறிப்பு:— டாக்டர் பிரெஸ்கிரிப்ஷன்களுக்கு [சீட்டுகளுக்கு] தேர்ச்சிபெற்றவரால் 24-மணி நேரமும் எங்களிடம் கிடைக்கும்.



ரேஷனிங் அட்வைசரிக் கமிட்டிக்கூட்டம்.

31—5—51 ல் ரேஷனிங் ஆபீஸில் ரேஷனிங் அட்வைசரிக் கமிட்டி கூட்டம் தலைவர் ஸ்ரீ பி. கே. தர்மலிங்கக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது.

புதிதாக வந்துள்ள ரேஷனிங் ஆபீஸர் ஸ்ரீ எம். நடராஜ முதலியார் பேசுகையில் ரேஷன் குற்றங்களைக் கூடுமானவரையில் மன்னித்து விடுவதாகவும், பெரிய குற்றங்களை மட்டும்தான் கேஸ் போடுவதாகவும் ...ண்கள் பெயரால் தான் அதிகமான குற்றங்கள் வருவதாகவும், மற்றும் பல விஷயங்களை விளக்கமாகக் கூறினார். ஸ்ரீ ஆர். கந்தசாமிக்கவுண்டர் எம் எல் ஏ ...ன் தேனீர் விருந்து நடைபெற்றது.

31—5—51 முடிய கீழ்க்கண்டவாறு ...டாக் இருப்பதாகவும், தற்போது ...டாக் நிலைமை திருப்திகரமாய் இருப்பதாகவும் ரேஷனிங் ஆபீஸர் தெரிவித்தார்

...ச்சரிசி மூட்டைகள்	2462.
...புழுங்கல்அரிசி மூட்டைகள்	456.
...கோதுமை மூட்டைகள்	169.
...சோள மூட்டைகள்	30.
...ரிக்கன்மாவு மூட்டைகள்	42
...ம்பா கோதுமை மூட்டைகள்	3.

தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் கலைந்தது. கூட்டத்திற்கு 17-மெம்பர்கள் வந்திருந்தனர்.

கேள்வி—பதில்.

கே:– நமது தேச விடுதலைக்காக அல்லும் பகலும் அயராதுழைத்த தியாகி எஸ். எஸ். விஸ்வநாத தாஸ் அவர்களைப் பற்றியும் அவர் காங்கிரஸிற்குச் செய்த சேவையைப் பற்றியும் பத்திரிகைகளோ, தலைவர்களோ எடுத்துக் காட்டாததேன்?
(என். நாராயணன்.)

ப:– அவரை யாரும் மறக்கவில்லை! ஆனால் நாம் பழமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டே இருந்தால் நாமும் நமதுநாடும் எப்போது முன்னேறுவது.

கே:– வரப்போகும் தேர்தல் நடக்காது என்று எதிர் கட்சிக்காரர்கள் கூறுவது உண்மைதானா?
(ஏ. எஸ். இப்ராகீம்.)

ப:– எதிர் கட்சிக்காரர்கள் வரும் தேர்தலில் நிச்சயமாய் மண்ணைக் கவ்வ நேரும் என்பதால் தான் இப்படிப் பித்தலாட்டப் பிரச்சாரம் செய்கிறார்கள்! கண்டிப்பாய் தேர்தல் நடந்தே தீரும்!

கே:– சமீபத்தில் அண்ணாத்துரை நெடுஞ்செழியனுக்கு நிதி திரட்டிக்கொடுத்தது ஏன்?
(ஆர். பி. சாமி.)

ப:– எங்கே நெடுஞ்செழியன்பிரிந்துச் சென்று தன்னைப்பற்றி அம்பலப்படுத்தினால் என்னசெய்வது என்றுதான் அவரை திருப்திசெய்ய நிதி அளித்திருக்கிறார்போலும்.

கே:– கிருபளானி காங்கிரஸிலிருந்து விலகியதின் மர்மம் என்ன?
(கே. வெள்ளிங்கிரி.)

ப:– சமீபத்தில் தேர்தல் வரப்போகிறதல்லவா? அதற்குள் தான் தயாராக வேண்டும் என்பதால்தான் பிரிந்திருக்கிறார். இதில் மர்மம் என்ன இருக்கிறது.

கே:– வடமொழியை பகிஷ்கரிக்கும் அண்ணாத்துரை எழுதிய ஓர் இரவு வசனத்தில் பூஷணம் என்னும் வார்த்தை இருப்பது என்? (கே சாரங்கன்)

ப:– அது அவருக்கே தெரியாது போலும்!

கே:– தன்னுயிரைப்போல் மன்னுயிரை டார் என்றார் நம் மகாத்மா காந்தி! மிருக பலி கூடாது என்று நம் சர்க்கார் தடை விதித்தது. நம் நகரில் அதுவும் எல்லைக்குள் சேவல் சண்டை கால்களில் கத்தி கட்டி நடைபெறுகிறது. இது நமது சர்க்காருக்குத் தெரியுமா? அல்லது தெரிந்து தான நடக்கிறதா? இது ஒரு பொழுது போக்குக்காகவா? (பி. கே. எம். சாமி.)

ப:– பிராணிகள்மீது இறக்கம் தேவை தான். இதைப்பற்றி நாம் விசாரித்து ஊர் வம்பில் எழுதுகிறோம்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.